ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1719/3 - 2011 අගෝස්තු 15 වැනි සඳුදා - 2011.08.15
*1719/3 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க சட்டத்தினால் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சட்டத்தினால் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க சட்டத்தினால் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1898 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட்டம் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க மற்றும் 2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மற்றும் 2010 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம்***

*அரச நிர்வாக அமைச்சரினால் ஆக்கப்பட்ட நிபந்தனைகள்*

*இந்நிபந்தனைகள் வலது குறைந்தோர் அனாதைகள் ஓய்வூதியம் வழங்கலுக்கான கட்டளைகள் என அறிமுகப்படுத்தப்படுகின்றன. விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் வாசகம் மற்றும் தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் 07 ஆம் வாசகங்களின் அடிப்படையில் இந்நிபந்தனைகள் பிறப்பிக்கப்படுகின்றன.*

1. *உடலியல் அல்லது உளவியல் குறைபாடு பிறப்பிலேயே அல்லது அனாதை வயதெல்லையினைத் தாண்ட முன்னரோ ஏற்பட்டிருத்தல் வேண்டும்.*

2. *பிறப்பிலேயே வலது குறைவுக்குட்படாதவராகையில் வைத்தியச் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் ஓய்வூதியத்தினைப் பெற உரித்துக் கிடைக்கும்.*

3. *வலது குறைந்த அனாதைப் பிள்ளையென ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் திருப்தியடைகையில் வைத்தியச் சபையொன்றின் முன் நிறுத்துதல் வேண்டும்.*

4. *சொத்துரிமை, குடும்ப வருமானம், வேறு வருமான வழிகள் காணப்படல், விவாக வாழ்வினுள் இணைந்திருத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் வலது குறைந்தவருக்குத் தமது வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக்கொள்ள இயலுமாவதன் மூலம் ஓய்வூதியத்தினை வழங்குவது பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினைச் சாரும்.*

5. *இவ் ஓய்வூதியதாரர் சிறையிலடைக்கப்படல், சமூக விரோதியாதல் அல்லது துர் நடத்தைகளில் ஈடுபடுதல் அல்லது வெளிநாடு செல்வதன் மூலம் ஓய்வூதியத்தினை நிறுத்த முடியும்.*

6. *பணத்தினைக் கையாளும் திறனற்ற நபர்களுக்குத் தகுந்த பாதுகாவலர்களை நியமித்தல் வேண்டும். அவர் வலது குறைந்த அனாதைப் பிள்ளையின் சீவனோபாயத்திற்கு மட்டுமே இவ் ஓய்வூதியத்தினை பயன்படுத்துதல் வேண்டும்.*

7. *ஓய்வூதியத்தினை அல்லது அதன் சதவீதமொன்றினை வழங்கக் கட்டளையிட ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு இயலும்.*

8. இவ் ஓய்வூதியம் தொடர்பில் பின்னுரித்தாளர்கள், தங்கி வாழ்வோர் மற்றும் அட்டோர்னி அனுமதிப்பத்திரதாரர்கள் இருத்தலாகாது.

9. பிறப்பிலேயே முழு வலது குறைவு நிலைக்குட்படாத நபர்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வைத்திய சபையின் முன் நிறுத்துதல் வேண்டும்.

10. இந்நிபந்தனைகள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் அவரால் வழங்கப்படும் தீர்மானத்திற்கு எதிராக அரச நிர்வாக அமைச்சுச் செயலாளரிடம் மேன்முறையிடலாம். அச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்.

இந் நிபந்தனைகள் ஆயுதப்படைச் சேவை விதவைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டங்கள் தொடர்பிலும் ஏற்புடையனவாகும்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07,
2011, யூலை 09.

09-09

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.